ஸ்ரீமத்வரவரமுநயேநம:

ஸ்ரீபராங்குசதாஸவைபவ ஸங்கிரகம்.

இஃது.

ஸ்ரீமத்-உபய-ஸ்ரீமான்-கோயிற்கந்தாடையன்

வாதூலராமாநுஜாசாரியர் திருவடிஸம்பந்தராகிய

சோளங்கிபுரம்.

ஸ்ரீவகுளாபரணதாஸராலியற்றியது.

இங்ஙனம்.

ஸ்ரீமத்-உ-வே-திருநீர்மலை-அஷ்டகோத்திரம்

கந்தாடை - ஸ்ரீமான் - ஸ்ரீராகவாசார்யசரணகமல

ஷட்பதமாகிய.

(வி[illegible]சி - பரிபுராவு)

ஸ்ரீராமாநுஜஜ்த்ராஸனுல்

நர்க்கோலம்.

நரசிம்முலுநாயுடு அவர்களது

அவிவேகசந்திரோதயவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பவ௵-வைகாசி௴.

ஸ்ரீபராங்குசதாஸர்.

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

சாற்றுகவி.

இஃது

சென்னைபோதனாசக்திவிர்த்திவித்யாசாலையென்னும் நார்மல் ஸ்கூல்

தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும்

கோ - இராஜகோபால பிள்ளை

அவர்களாலியற்றிய

பதினறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பேர்பெறுகடிகாசலமுறைவகுளாபரணனைப்பேசுமெய்ப்புலவன்
பிஞ்ஞகன்பிரமனாதியர்தேடப்பிறங்கிடல்செயாத்தனிமுதல்வன்
கார்பெறுமேனிமெய்ம்முதற்கடவுள்கழலிணையுளத்திடையிருத்தி
காழ்த்தவெம்பிறவிக்கடல்கடப்பானிக்காசினியதன்மிசைமதியின்
கூர்பெறுசீபராங்குசதாஸர்கிளர்சரிதையைநனிசுருக்கிக்
கிளத்தினன்சிந்துச்செய்யுளாலுலகர்கேட்டுணர்தரப்பெருமகிழ்வால்
சீர்பெறுமன்னோற்கியாஞ்செயலுற்றசிறந்தகைம்மாறொழியாது
தெரிந்திடினவன்சீரெம்முடைவாயாற்செப்பிடலன்றிமற்றியாதே.

ஸ்ரீபராங்குசதிவாகராய நம:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீபராங்குசதாஸவைபவஸங்கிரகம்

நேரிசைவெண்பா

சார்மேவுநெஞ்சமேதாசர்பராங்குசனார்
சீர்மேவுவைபவத்தைச்செப்புதற்குப்—பேர்மேவு
மாகவதர்காட்டிமயக்கப்பிறப்பறுக்கும்
பாகவதர்தாட்டுணையேபற்று.

கீர்த்தனை-இராகம் நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி

ஸ்ரீபராங்குசதாஸர் சரணம்-மனமே
சிந்தித்தாலொழியுமேசென்ன மரணம்-(ஸ்ரீபராங்

அநுபல்லவி.

வரோதயமானசீ மானார்-நங்கள்
வாயினமுதின்மதுரிக்குந் தேனார்
குருகைநம்பிக்கடிமை யானார்-உள்ளம்
கோணலில்லாத்துறவின்னெறி போனார் (ஸ்ரீபராங்)

சரணங்கள்.

குமதகஜங்கட்குச் சிங்கம்-ஞானம்
கூடும்பத்திரைமாற்றுயர்ந்திடுந் தங்கம்
அமிதஜன்மசாகர வங்கம்-நங்கள்
அதுலதிவ்யகுணமானவுத் துங்கம் (ஸ்ரீபராங்)

கண்ணனல்லாற்றெய்வ மில்லை-என்று
காசினியோருக்கவர்சொன்ன சொல்லை
எண்ணிநீநம்பிட வல்லை-ஆகில்
இல்லையில்லையுனக்கினிவருந் தொல்லை (ஸ்ரீபராங்)

கண்டைமீன்விழிமாதர் பேசசு-சிலம்பு
காலிற்கலகலெனக்டக்குங்கை வீச்சு
கண்டாசைப்பட்டாலென் னுச்சு-உன்தன்
கனமெல்லாம்பாழாகிவந்ததே யேச்சு (ஸ்ரீபராங்)

உலகவாஞ்சைபோமெத்த மோசம்-அதிற்
குடல்பட்டாலுனக்குவரும்பரி காசம்
இலகுமவரடி நேசம்-உனக்
கிருந்தாலுதிக்குமெய்ஞ்ஞானப்பிர காசம் (ஸ்ரீபராங்)

தினமும்பிரபத்திநெறி நில்லாய்-இரை
தேடுமைம்பொறிகளைமுதலற வெல்லாய்
கனமிதைவிடவுண்டோ சொல்லாய்-இதைக்
கைவிடாதிருக்கிற்றுன்பமொன்று மில்லாய் (ஸ்ரீபராங்)

மூடருறவு செய்யாதே-செய்து
முழுதுங்கவலைப்பட்டுன்னுள் நையாதே
தேடும்பொருளாசை வையாதே-வைத்தாச்
சென்மப்பிணியையோவுனக்குப் பொய்யாதே (ஸ்ரீபராங்)

எதிராசர்சம்பந்தனை நின்று-பத்தி
நிறமுஞ்செய்சிசபத்தர்கூட்டத்திற் சென்று
சதிராகவவர்தமை யொன்று ஒன்றில்
சாசுவதபரமபதம்பெறல் நன்று (ஸ்ரீபராங்)

புன்புறச்சமய நாடாதே-நாடில்
பொல்லாக்குணமுன்னைவிட்டுப் போகாதே
என்னேடுனக்கிகென்ன வாதே-அவர்
இணையடித்தொண்டினைச்செய்வாயிப் போதே (ஸ்ரீபராங்)

சாற்றுமிச்சொல்லைநீ மனமே-கடிகா
சலபதியானைநீகொள்ளுவாய் தினமே
ஏற்றதினியுண்டோ கனமே-இதின்
இல்லையில்லைநம்புவாயுண்மைத் தனமே (ஸ்ரீபராங்)

நாமாவளி-இ-ம்-கேதாரம்-தர்ளம்ஆதி.

ஸ்ரீபராங்குசதாஸர்திருவடிகளே சரணம்-என்றவர்க்கு
பாபதுரித ஹரணம்-

சிந்து-இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி
கண்ணிகள்

பாகவதரோகேளீர் ஸ்ரீமத்
பராங்குசதாஸர்பிரபாவமதை
மோகவலையறுத்து பொல்லா
மூடர்கள்நேசந்தனைவெறுத்து
ராகத்வேஷம்விடுத்து சீதா
ராமனையேகதியென்றடுத்து
தேகாபிமானமதை விட்ட
தெளிவுளோரெயான்செப்புமிதை (க)

வேளாளக்குலத்துதித்த நல்லவி
வேகமுவாருறவநேகமுளார்
கோளும்பொய்ப்புகலார் சைவமதந்
கொண்டிருந்தார்களிப்புண்டிருந்தார்
நாளும்ஹரிபஜனை செய்வோரை
நாடியவர்களுடன்கூடியிருப்பார்
வேளயன்றனையீன்ற எங்கள் திரு
வேங்கடப்பெருமானருளாலே (உ)

திரிசிரபுரந்தனிலே பரகாலர்
திவ்யமாதவத்தால்வந்துதித்த
ஹரிபஜனைசெய்யும் பராங்குச
ரனைவர்துதிகுஞ்சர்ஜனஸ்ரீமான்
பெருமையைச்சொல்லவென்றால் மெத்த
பெரியோர்களுக்குமீதரிதாமே
சிறியேனவர்பெருமை சிறிது
தெரிந்ததைச்சொல்கிறேன்சிரத்தையுடன் (ந)

வேதவல்லியென்னும் பத்தினி
வெகுகுணவான்ஸ்ரீயாளவந்தான்
பூதலத்தோர்புகழும் புத்திரன்
பிறந்தனன்நரஹரிவரந்தன்னால்
ஆதரவாய்ச்சிலநாள் லௌகிக
மநுசரித்திருந்ததில்மனம்வெறுத்து
மாதவன்பாதமதைச் சேர்
மைந்தன்மனைவிதந்தையுடன் (ச)

வருமார்க்கந்தனிலே நற்றிரு
மாலிருஞ்சோலைநன்னகரில்
ஹரிகீர்த்தனைபாட மாலின்
அருள்நமக்கில்லையென்றதினாலே
ஒருநாள்துணிந்துயிரை போக்கிக்கொள்
வோமென்றூக்குக்கயிறெடுக்கப்
பரமதியாகியும் பக்தனைப்
பாதுகாக்கவங்காதரவாய் (ரு)
அதிதுணையாகவேதான் யாரோ
அங்கிருக்கும்வைஷ்ணவர்போல
எதிராகவேவந்து நீயிங்
கேனப்பாவுயிர்விடநினைந்தாய்
மதியின்வருத்தமது தீரும்
வழிசொல்வேன்வரும்பழிவெல்வேன்
அதைச்சொல்லெனக்கேட்க தாச
ரகீர்த்தனைகளைப்பிரியமுடன் (சா)
பாடவராததினால் யானும்
பரிந்துயிர்விடநினைந்தேனென்றார்
ஆடும்பாம்பணைமேல் பள்ளிகொள்
அச்சுதனவர்பக்திமெச்சிக்கொண்டு
பாடவரங்கொடுத்து மறைந்தனர்
பக்தரவனாஹரியெனநினைந்து
வாடிமனதுநொந்து சோக
வாரிதிதனிலிழிந்தவர்போல் (எ)
மயக்கங்கொண்டவ்விடம் சுற்றி
மாயவனேயென்றோசையுடன்
புயல்வண்ணனைத்தேடி மெத்த
புலம்பினரிருகண்ஜலம்பெருக
அயனரனறியரும் காண
வரியனாகியவற்புதமாலே
தயவுடனிங்குவந்து சேவை
தந்துமறைந்திடத்தகுமோவென்று (அ)
வெகுவிதமாய்த்துதித்து ஹரியை
விடத்தெய்வம்வேறில்லையெனநினைத்துப்
பகவன்கிருபையாலே அதுமுதல்
பாடினர்கீர்த்தனைப்பகவான்மேல்

கைவாகனமேலும் கமலக்
கண்ணனுமவர் துதிபண்ணுவதற்
ககமிகவேமகிழ்ந்து தக்ஷணம்
அரவசயநந்தனைவிட்டெழுந்து (௯)
திருத்தியாட்கொள்ளவேண்டும் என்று
திருவுளங்கொண்டுநித்திரைதனிலே
திருவல்லிக்கேணியில்வாழ் அத்தங்கி
திருவேங்கடதாதாசார்யர்
திருவடிபோய்ப்பணியாய் என்று
திருவருள்செய்நித்திரைவிழித்து
திருமனமதுபொங்கிக் காலையில்
திருவல்லிக்கேணிமாநகர்வழியை (௰)
நாடிநடக்கும்போது அத்தங்கி
நகர்த்திருவேங்கடதாதாரியர்க்குத்
தேடியேமதடிமை வருகிறான்
திருமந்திரமவற்குரைசெய்யென்று
கோடிக்கதிரொளியோன் கனவில்
கூறினன்விழித்தவ்வாரியரும்
நீடியமால்தமக்கு நித்திரையில்
நியமனஞ்செய்ததைத்தாம்நினைந்து (௰௧)
இதுவென்னவாச்சரியம் நம்மை
யெங்கிருந்தேதேடிவருங்கனவான்
அதையறிந்திடவேண்டும் என்றவ்
வாசாரியரகமகிழ்ந்திருக்க
அதுசமயந்தனிலே தாச
ராரியர்திருமாளிகைதேடி
அதிதுரையாகவந்து திருவேங்க
டாரியரடிபணிந்தாச்ரயித்து (௰௨)
சதுர்வேதம்முதலா ஆறு
சாத்திரபுராணகலக்கியானம்
சதிருடன்கற்றுணர்ந்து விசிஷ்டா
த்வைதமதந்தனைவிரித்தடியார்க்
கிதமுடன்பொருளுரைக்கும் குருவே
எங்களைத்திருத்தியாட்கொள்ளுமென்று
துதித்துத்தொழுதுநிற்கும் இவர்பரி
சுத்தரென்றவரதுசித்தமகிழ்ந்து (௰௩)

பஞ்சசமஸ்காரம் செய்து
பராங்குசதாசனெனப்பேர்பகர்ந்தார்
வஞ்சிசுதன் தந்தை தமக்கும்
வகுத்தனர்பேரவைபகுத்துரைப்பேன்
அஞ்சனவிழியுடையாள் மனைவிக்
கருளினர்வேதவல்லித்தாயென்று
மஞ்சன் ஸ்ரீயாளவந்தான் தந்தைக்கு
வகுத்தனர்பரகாலதாசனென்று (௰௪)

அனைவருமாசாரியர் திவ்ய
அநுக்கிரகம்பெற்றுக்கினைப்படிக்கு
மனதினிலரிபாதம் ஸ்மரணை
மறவாமல்திருமந்திரத்வயமதனால்
தினமுமாசாரபரி சுத்த
சீலமுடன்சிலநாளிருந்து
நினைவுடனாழ்வார்கள் பிரபந்த
நெறிதனைத்தாசரறிந்துணர்ந்து (௰௫)

திவ்வியதேசங்கடோறும் சென்று
சேவிக்கவேண்டுமென்றுவலுடன்
ஒவ்வொருஸ்தலமாகச் சேவித்
துளமகிழ்ந்தேயவர்வரும்வழியில்
இவ்வரிதாசர்தமை கண்டு
இறைஞ்சியெழிற்றிருக்கோட்டியெனும்
அவ்வூரினில்வாழும் பலபொய்
யாகம்வாதிகளனேகவிதம் (௰௬)
சிவனார்பெருமைகளை நூலிற்
செப்பியவற்றுட்சிலபகர்ந்து
தவறுநெறியுள்ள பராங்குச
தாசரோகைலைவாழீசனைநீர்
கவனமுடன்தொழுதால் அழியாக்
கைலாயமுமக்காணியதாம்
சிவனன்றிநன்முக்தி கொடுக்கும்
தெய்வமுமினிவேறில்லையென்றார் (௰௭)

தாசருமதைக்கேட்டு எங்கள்
தாமோதரனன்றியித்தனிதனிலே
ஈசன்வேறுளனோ என்று
இயம்பினர்நால்வேதங்களிலும்
கேசவனேதெய்வம் என்பதைக்
கேட்டிலிரோகேளுங்களென்று
பேசினரெம்பெருமான் கீர்த்திப்
பெருமைகளையுமவர்க்கருமையுடன் (௧௮)

கேட்டவ்வாதியரில் சிலபேர்
கேசவனேபரனென்றுசைகொண்டு
நாட்டமுடனவர்கள் தாசர்
நவின்றதைநல்வழியெனவுகந்தார்
நாட்டினிற்புகழ்படைத்த ஸ்ரீரங்க
நாயகர்கோயிலைநாடிவந்தார்
கூட்டத்துடன்பஜனை செய்து
கொண்டாடித்திருக்கோயிற்குட்புகுந்து (௧௯)

சந்நிதிமுன்னின்று சுப்பிர
சன்னாக்கண்டுசென்னதங்கொண்டு
பன்னகசயனன்மேல் கீர்த்தனை
பாடினராடினரற்புதத்தை
அங்கரந்தனிலே இருக்கும்
அந்தணரும்பலர்வந்துகண்டு
இந்நிலந்தனிலுள்ள தாசரில்
இவர்க்கிணையொருவருமில்லையென்றார் (௨௰)

ஸ்ரீரங்கநாயகனைச் சேவித்துத்
தீர்த்தசடகோபப்பிரசாதம்பெற்று
ஸ்ரீரங்கநாயகித்தாய் திவ்ய
திருவடிவணங்கிப்பின்பன்னிருவர்
ஆரியரனைவரையும் சேவித்
தங்கர்விட்டுச்சேலஞ்சென்றார்
ஊரினிலுள்ளோர்கள் இவர்நல்ல
உத்தமரென்றறிபத்தரெல்லாம் (௨௧)

வந்துப்பணிந்தவர்கள் தாசரை
வரிசையுடன்ஸ்ரீஹரிசரித்திரம்
சிக்ஷைகளித்திடவே தேவரீர்
திருவாய்மலர்ந்தருள்செய்கவென்றார்
செந்திருவாழ்மார்பன் திருவுளச்
செயலெனஅவர்மேல்தயவுடனே
சந்ததம்ஹரிபஜனை செய்யும்
சஜ்ஜனரைச்சிலபாடலண்டார்கள் (உஉ)

வாதுகள்மிகப்பேசிக் கச்சேரி
வரைக்குஞ்சம்மனல்வரவழைக்க
ஈதென்னவாச்சரியம் என்றெவரும்
எம்பெருமான்செயலெனவருந்த
நீதிமுறைமைதவிரா ஜட்சிதுரை
நிஜபத்தரிவரொன்றுமினைவிலெண்ணிக்
காதகர்பிரியாதைப் பிடிக்கத்த

காதெனவழக்கினைத்தள்ளிவிட்டார் (உங)
மாசற்றமனமுடைய ஹரிபக்தர்
மண்ணளந்தவன்பாதம்மனதிலெண்ணித்
தாசஜனங்களுடனே அங்கார்விட்டுத்
தகைபெறுசென்னைமாநகர்வந்து
வாசவன்பூசுரரும் புகழ்திரு
வல்லிக்கேணிவளருக்மணிக்கு
நேசன்ஸ்ரீபார்த்தசாரதி சன்னிதியில்
நிமலநிர்மயநித்யானந்த (உச)

கேசவநாராயண மாதவ
கிருபைசெய்கோவிந்தவிஷ்ணுமதுசூதன
தேசிகதிருவிக்ரம வாமன
ஸ்ரீதரரிஷிகேசபத்மநாப
தாசர்க்கிரங்கிவரம் வேண்டியதைத்
தந்தருளெந்தைதாமோதரனே
பாசபந்தங்களறுத்து என்றனைப்
பாதுகாத்தருள்பார்த்தசாரதியே (உரு)

இன்னம்பலவிதமாய்த் துதித்து
இருகரங்கூப்பியிணையடிபணிந்து
புன்னுந்தமிழாலே கீர்த்தனை
பாடினரநேகபாகவதருடன்
தம்மிருதயங்களித்துத் தீர்த்தஸ்ரீ
சடகோபாதிப்பலவரிசைபெற்று
அந்நகர்தனிலிருந்து தாசர்
அரியல்லாற்றெய்வமில்லென்றநுதினமும் (உசு)

பஜனைசெய்துகொண்டிருக்கப் பாடண்டர்
பரத்வநிர்ணயம்பரமசிவனுகல்லால்
தசரதசுதனுக்கு எப்படி
சாற்றிநீரதற்கேதுசாட்சியென்றார்
விசதமெடுத்துரைப்பேன் நான்கு
வேதாதிநூல்விரித்துரைக்கின்ற
நிஜதெய்வம்விஷ்ணு என்று
நேத்திரமூன்றுடையானுமைக்கு (உஎ)

உரைத்திருக்கின்றமையால் யானுமவ்
வுண்மையையிவ்வுலகோரறிய
உரைத்தேனென்றுரைக்கத் தாசர்
உண்மையையறியாவவ்வூர்ச்சைவர்
அரவாபரணற்குப் பரத்வமிலை
யல்லாமல்நரஹரிக்காமோவென்று
பரிகாசத்துடனே திருமால்
பத்தனைதூஷணைபண்ணினர்கள் (உஅ)

அதுசங்கதிகேட்டுத் தாசரும்
அரியைவிட்டன்யரைத்துதியோமென்று
மதுரத்திலுமதிக இராமநாம
மதுரபானமதின்மகிமையினால்
எதிரில்லையெவருமென்று எம்பிரானை
எந்நேரமும்பஜனைசெய்திருந்தார்
சிதருமனதுடைய தாசரை
ஜெயங்கொள்வதெவ்விதமெனக்கருதி (உகூ)

இருந்தார்வழிபார்த்து ஒருநாள்
எழிற்பார்த்தசாரதிசந்நிதிக்கேகி
வரும்போதெதிர்நாடிச் சைவர்வீண்
வாதுபுரிந்துதாசர்மீதுகுற்றம்
இருக்குதென்றவர்போலீஸ் கச்சேரிக்
கேகித்துரையெதிர்வீண்வழக்குரைக்கத்
தருமந்தவிராத துரைமார்
தக்ஷணந்தாஸரைவரச்செய்து (௯௰)

அவர்வாய்மொழியறிந்து இவர்மஹா
அரிபக்தரொன்றுதுரையகமகிழ்ந்து
சிவமதக்காரர்களே நீங்கள்
செய்திடும்வழக்குத்தகாதென்று
விவரித்தவ்வழக்கைத் தள்ளி
விட்டனர்துரைகளும்பொட்டெனவே
சிவசமயத்தோர்கள் தாசர்
ஜெயம்பெற்றுரொன்றுமனந்தியக்கமுற்றார். (௯௧)

அடியுங்கள்ஜயபேரிகை நம
தரியல்லால்தெய்வமில்லையென்றுபுவியில்
படியளந்தவனருளால் கீர்த்தனை
பாடினர்ஸ்ரீபராங்குசதாஸரும்
கெடிபெற்றுரிவரொன்று அங்கே
கேட்டிருந்தவரெல்லாந்தாட்டியுடன்
அடிக்கடித்தெருத்தோறும் சற்கரை
யள்ளியிட்டனரவருள்ளமகிழ்ந்து (௯௧)

இப்படியிருக்கையிலே பாடண்டர்
எப்படியிவரைச்செயிப்பதென்று
அப்பணியரனுற்குப் பரத்வமில்லை
ஆமெனச்சாஸ்திரத்தால்ஜெயிப்போம்
ஒப்புக்கொள்ளுவீரொன்று தாசருக்
குடனவர்கள்நிக்கைபத்திரமொன்று
மெய்ப்புடனனுப்புவித்தார் தாசரும்
மிகமனமகிழுடன்மறுபத்ரிகை (௯௯)

அப்படிக்கேசெய்வோம் அல்லது
அனைவருமறியவோர்நறுக்கெழுதி
அப்பணிசடையோனே பரனென்
றக்கினியில்போட்டநறுக்கை
யெப்போதும்போலே தீயாம
லெடுத்துக்கொடுப்பாராகிலிட்டமுடன்
தப்பாமல்யானும் என்னைச்
சார்ந்தவருஞ்சாகரஞ்சார்வோம் (௫௪)

இதுசம்மதமானால் யானே
எழுதித்தருவேன்ராசாங்கமறிய
உதவாதென்றக்கால் இந்த
உலகெல்லாமோரடிபாலளந்த
மதுசூதநன்றனக்கே பரத்வம்
மறைகளுமறியவோர்நறுக்கெழுதி
எதிராகவேநெருப்பில் போட்டு
யெடுத்துத்தருவேன்தீப்பட்டெரியாமல் (௫௫)

சத்தியமிதுநீங்கள் சைவ
சமயம்விட்டெங்கள்தாமோதரற்காளாய்
இத்தனைப்பேர்நாங்கள் வேறு
எதிர்மொழியொன்றேனுமியம்பாமல்
சித்தமாய்வருவோமென்று யெழுதித்
தீரமுடன்தருகிறோமென்றறிக்கைப்
பத்திரிகையினாலே சென்னைப்
பட்டணமறியவேயெட்டுத்தினத்துள் (௫௬)

தெரிவித்திடவேண்டும் என்று
தீரமுடன்தாசர்தெரிவித்தனர்
திருமாலடியாரை இனிநாம்
ஜெயிப்பதற்கென்னவாலோசனையென்று
கருதிச்சைவரெல்லாம் முன்னாள்
காளிதாசனொனுங்கவிராஜன்
தரையுள்ளவரறிய அமாவாசை
தனிற்பூர்ணசந்திரனைத்தாம்காட்டினாராம் (௫௭)

இக்காலந்தனிலே நீரும்
இந்நகர்தனிலெல்லாருங்காண
நக்கன்சடையிலிலாச் சந்திரனை
நலமுடன்காண்பித்தீராகில்
சக்கரமுஞ்சங்குந் தரித்த
தந்திவரதருக்காளாவோமென்றார்
மிக்கபுகழ்படைத்த தாசரும்
மெய்ப்பொருளைமனதில்மிகவருந்தி (௯௮)

மிகச்சம்மதமானேம் இந்த
விரிகிலஞ்சூழ்துரைத்தனமறியக்
ககவாகனற்காளாய் வருவோமென்று
கையொப்பமிட்டுத்தருவீராகில்
சகலஜனங்கள்காணப் பூர்ண
சந்திரனைக்காண்பிப்பேனென்றார்
மகத்துவமுளதாசற் இவர்மெத்த
வைராக்கியபாக்கியவானென்றும் (௯௯)

மறுமொழிபகராமல் சைவர்கள்
மனமதுகிலேசமாயிருந்துவிட்டார்
இறுமாப்பொடுநம்மோ டெதிர்த்தவர்
இன்னமுமேன்வரவில்லையென்று
நெறியில்லாவுலகோர் தங்கள்
நேசம்நமக் கேனென்றெள்ளி
வெறுப்புற்றங்கரும் விட்டுத்திரு
வேங்கடதாதாரியனைப்பணிந்து (௱)

தம்பாரிசுதனை துறந்து
தகைபெறுந்திருமலைதனிலுள்ள
தும்புருகோனைக்கேகிக் குகையில்
துணிவுடனேதவமுனிவருடன்
எம்பெருமான்றன்னைக் காண
ஏகமனதுடனேயோகமதில்
சம்பிரமதாயிருக்கும் பராங்குசர்
சரித்திரமனைதவகுளாபரண (௱௧)

தாசன் திருக்கடிகா சலமால்
தின்னருளால்சாற்றினேன்சிந்தாய்
காசினிதனிலுள்ளோர் இந்தக்
கதையினைமெய்க்கருத்துடனெழுதி
ஆசையுடன்படிப்போர் கேட்போர்
அந்தகனுக்காளாகாமல்
பாசங்களும்நீங்கித் திருமால்
பதம்பெறுவார்பாரதிற்பிறவார் (சஉ)

பாகவரோகேளீர்

வாழித்திருநாமம்.

எண்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்

சீர்ச்சர்வதாரிதுலாஞ் சிறக்கவந்தோன்வாழியே
திங்கள்விசாகந்தன்னிற்செனித்தருள்வோன்வாழியே
கார்க்குழலாள்வேதவல்லிகணவனென்போன்வாழியே
கணிக்கருஞ் ஸ்ரீயாளவந்தார் கருதுதந்தைவாழியே
கூர்த்தபெருவேளாளர் குலதிலகம்வாழியே
குமதவிருட்குக்கதிரக்கூடினோன்வாழியே
நீர்த்தபராங்குசதாசகீணுமன்வாழியே
நீடுலகிலவன்பஜனைநிதம்வாழிவாழியே.

ஸ்ரீமத்பராங்குசதாஸர்திருவடிகளேசரணம்

ஸ்ரீபராங்குசதாஸவைபவஸங்கிரகம்

முற்றுப்பெற்றது.